# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069865

C

1. District : மாவட்டம் : திருநெல்வேலி
PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
Year ஆண்டு: 2020
FIR No.: மு.த.அ. எண்: 09/2020
Date நாள்: 12.12.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 11.12.2020
Date to : நாள் வரை 12.12.2020
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 20.00 hrs to
Time to : நேரம் வரை 04.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020
Time : நேரம் 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Transport Check Post, Puliyarai, 70 Km West.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — A.V.மூர்த்தி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.அய்யப்பன் பிள்ளை
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு — 06.06.1966
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி தென்காசி மாவட்டம். இருப்பு திருநெல்வேலி
Address : முகவரி — மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி.S.நீலவேணி, மோட்டார் வாகன ஆய்வாளர், (NT), போக்குவரத்து துறை சோதனை சாவடி, புளியரை. 2).திரு.A.எட்வர்டு, த/பெ ஆபிரகாம், 82/6, முத்துராம் நகர், தென்காசி மாவட்டம். (தனி நபர்) (3) திரு.M.ராகவேந்திரன், த/பெ மாடசாமி, 6/21 பசும்பொன் தெரு, தேசவபுரம், செங்கோட்டை தாலுகா. (தனி நபர்)

8. Reasons for delay in reporting by the Complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 12.12.2020ம் தேதி சுமார் 11.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V.மூர்த்தி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 12.12.2020-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் A.V.மூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம். பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, பொருள்: புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை திடீர் ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக தென்காசி மாவட்டம், புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி அலுவலர்கள் கேரளாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனஙகளுக்கும், தமிழ்நாட்டில் இருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனங்களுக்கும் தற்காலிக பெர்மிட் வழங்குவது மற்றும் தணிக்கை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
12/12/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.20 at 12.30 hr.

Name: பெயர் E. MccLARINE ESKHOL
Rank: நிலை DSP No. எண் VSAC
Tirunelveli detachment

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

குறித்து லஞ்சம் வாங்குவதாக 12.12.2020-ம் தேதி அதிகாலை சுமார் 01.00 மணியளவில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் என்னுடைய தலைமையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மெக்லரின் எஸ்கால் மற்றும் போலிசாருடன் சேர்ந்து மேற்படி புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை திடீர் தணிக்கை செய்து அதிகாலை சுமார் 04.05 மணிமுதல் 07.45 மணி வரை திடீர் சோதனை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தின் முன்பு நின்று வாகனங்களை நிறுத்தி வாகன ஓட்டுநர்களை சோதனை சாவடிக்குள் செல்லுமாறு சொல்லிக் கொண்டிருந்த தனி நபரான திரு.ராகவேந்திரன் என்பவரின் ஆக்டிவா இருசக்கர வாகனம் எண்.TN 76 AJ 6116 இருந்து ரூ.5,200/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் சோதனை செய்த பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.S.நீலவேணி மற்றும் மேற்படி அலுவலத்தில் கணிணியை இயக்கிக் கொண்டிருந்த தனிநபரான திரு.எட்வர்டு ஆகியோர் அலுவலகத்தினுள் இருந்தனர். அலுவலக அறைகளை சோதனை செய்த போது ரூ.43,070/- கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்த பணமான ரூ.48,270/-ற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை இன்று (12.12.2020) காலை 05.00 மணிக்கு ஆரம்பித்து 07.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த திருமதி.S.நீலவேணி மற்றும் தனிநபர்களான திரு.ராகவேந்திரன், திரு.எட்வர்டு ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம்.(A.V.மூர்த்தி) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம். 12.12.2020ம் தேதி புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V..மூர்த்தி அவர்கள் திடீர் தணிக்கை செய்தது சம்மந்தமான செயல்முறை ஆணை. முன்னிலை : 1) திரு.A.V.மூர்த்தி, திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. 2).திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திரு.D.ராபின் ஞானசிங் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 12.12.2020-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு தென்காசி மாவட்டம் புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடி அலுவலர்கள் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களுக்கும், தமிழ்நாட்டிலிருந்து

கேரளாவிற்கு செல்லும் வாகனங்களுக்கும் தற்காலிக பெர்மிட் வழங்குவது மற்றும் தணிக்கை குறித்து லஞ்சம் வாங்குவதாக கிடைத்த தகவலின் படி இன்று 12.12.2020ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு திருநெல்வேலி லஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புத்துறை அலுவலகத்தில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.V.மூர்த்தி, துணை கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் பெண் காவலர் திருமதி.பிரவீணா உட்பட போலீஸ் பார்டிகளுடன் அரசு வாகனம் TN 22 G 0471 மற்றும் TN 21 G 0489-ல் புறப்பட்டு அதிகாலை 04.05 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்கு வந்து திடீர் தணிக்கை செய்யப்பட்டது. சோதனை சாவடியின் முன்பு ரோட்டின் அருகே அமைக்கப்பட்டிருந்த ஆஸ்பெஸ்டாஸ் அருகே ஒரு நபர் இரு பக்கங்களில் இருந்து வரும் வாகனங்களை டார்ச் லைட் அடித்து நிறுத்தி, வாகன ஓட்டுனர்களை சோதனை சாவடிக்குள் செல்லுமாறு சொல்லிக்கொண்டிருந்தார். அந்த நபரை பற்றி கேட்டபோது, தன் பெயர் ராகவேந்திரன் என்றும், அவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. ஆனால் அவர் அருகே வாகன சோதனை சாவடி முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆக்டிவா இருசக்கர வாகனம் எண் TN 76 AJ 6116 பற்றி கேட்க அது தன்னுடைய வாகனம் என்றும், அதில் இருந்த ஒரு டைரியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த டைரியின் அட்டையில் DIARY 2021 என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த டைரியை சோதனை செய்தபோது அதில் உள்ளே கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.5,200/- (500X10=5,000, 200X1=200) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது மேற்படி பணத்தை கணினியில் உள்ள திரு.எட்வர்டு அவர்கள் தன்னிடம் தந்து வைக்க கூறியதாக கூறினார். அந்த பணம் மற்றும் டைரி விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. மேற்படி இருசக்கர வாகனமானது தனது அத்தை திருமதி.வள்ளி பெயரில் உள்ளது என்று தெரிவித்தார். சோதனை சாவடிக்கு உள்ளே நுழையும்போது மாடிக்கு செல்லும் படி அருகே ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ஆரோக்கியதாஸ் என்றும், தன்னுடைய ஊர் திருச்சி மாவட்டம் ஓலையூர் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆக்டிங் டிரைவராக வந்திருப்பதாக சொன்னார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவர் தன்னிடம் இருந்த பர்சில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.520/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தன்னுடைய செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சோதனை சாவடி அறைக்கு உள்ளே நுழைந்ததும் கணினி கேபின் உள்ளது. அதில் கட்டண வசூல் செய்துகொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் எட்வர்ட் என்றும், இன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.S.நீலவேணி தன்னை இங்கு வேலைக்கு அமர்த்தியிருப்பதாகவும், தான் வேலை

செய்யும் நாட்களில் தனக்கு ரூ.800/- முதல் ரூ.1000/- தருவார் என்றும் தெரிவித்தார். சேரிலுக்கு கிழ்புறத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) திருமதி.S.நீலவேணி அமர்ந்திருந்தார். அவர் அலுவலின் போது சாதாரண சுடிதார் அணிந்திருந்தார். மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கணினியில் இன்றைய வசூல் குறித்து கேட்டபோது அவர் கணினியில் இருந்து 11.12.2020ம் தேதி இரவு 08.00 மணி முதல் 12.12.2020ம் தேதி அதிகாலை 04.20 மணிவரை உள்ளதற்கான ஸ்டேட்மென்ட் எடுத்து கொடுத்தார். அதன்படி வசூலான மொத்த தொகை ரூ.29,850/- என்று இருந்தது. கணினியில் இருந்து பெர்மிட் ரசீது கொடுத்துக்கொண்டிருந்த திரு.எட்வர்ட் அருகே இருந்த பணப்பெட்டியை எடுத்து அதில் உள்ள பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.30,020/- இருந்தது. மேற்படி ஸ்டேட்மெண்டோடு ஒப்பிட்டு பார்த்ததில் Cash boxல் ரூ.170/- அதிகமாக காணப்பட்டது. அதிகமாக இருந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.170/- (100X1=100, 50X1=50, 10X2=20) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 11.12.2020ம் தேதி இரவு 08.00 மணி முதல் 12.12.2020ம் தேதி அதிகாலை 04.20 மணிவரை உள்ள வசூல் தொகையை பணப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க ரூ.29,850/-சரியாக இருந்ததால் மேற்படி மீதமுள்ள ரூ.29,850/- மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நீலவேணியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. கணினி மேஜையில் ஒரு பிளாஸ்டிக் டிரேயில் கத்தையாக பணம் இருந்ததை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.10,100/- (500X8=4,000, 200X4=800, 100X22=2,200, 50X42=2,100, 20X30=600, 10X40=400) இருந்தது. மேற்படி பணம் பற்றி திரு.எட்வர்டு என்பரிடம் கேட்டபோது அவர் புளியரை சோதனை சாவடியை கடக்கும் வாகனங்களில் இருந்து தற்காலிக பெர்மிட் மற்றும் சீல் அடிப்பதற்காக பெறப்பட்ட லஞ்சப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.10,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கணினி மேஜை அருகே நின்று கொண்டிருந்த திரு.எட்வர்ட்டிடம் இருந்த பணத்தை ஆஜர் செய்ய சொன்னபோது அவர் தன் சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.700/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது தன்னுடைய செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.700/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது கணினி மேஜை மேலே 8 வெள்ளை பேப்பரில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நீலவேணி அவர்கள் கையொப்பம் போட்டது காணப்பட்டது. அது குறித்து திரு.எட்வர்டிடம் விளக்கம் கேட்க அது மோட்டார் வாகன ஆய்வாளர் ஓய்வில் உள்ளபோது அவசர தேவைக்கு தற்காலிக பெர்மிட் போட தந்ததாக கூறினார். மேற்படி 8 பேப்பர்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நீலவேணி அமர்ந்திருந்த மேஜையின் தென்புறத்தில் உள்ள அறையை சோதனை செய்தபோது, அறையின் வடமேற்கு மூலையில் உள்ள இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அதன்

உள்அறையில் பணம் இருந்ததை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.57,490/- இருந்தது. அந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது அவர் 11.12.2020ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை கட்டண வசூல் தொகை என்று தெரிவித்தார். மேற்படி பணத்தை சோதனை சாவடியின் பணப்புத்தகத்தோடு ஒப்பிட்டு பார்த்தபோது இரண்டும் ஒன்றாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.57,490/-ஐ மோட்டார் வாகன ஆய்வாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் தென்புறத்தில் இன்வெர்ட்டர் பேட்டரியும், சிறிய பூஜை அறையும் இருந்தது. மேற்படி அறையின் கீழ்புறத்தில் உள்ள அறையில் ரேக்குகளில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி ரெக்கார்டு அறையில் கீழ்புறத்தில் உள்ள சிமெண்ட் ரேக்கின் மேல் தட்டில் உள்ள ஆவணங்களுக்கிடையே கத்தையாக பணம் கிடந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.32,800/- (500X65=32,500, 100X3=300) இருந்தது. அந்த பணம் பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நீலவேணியிடம் கேட்டபொது தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.32,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையின் கீழ்புறத்தில் சமையல் அறையும், அதன் கீழ்புறம் கழிவறையும் அதனையடுத்து பெரிய ஹாலும் உள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.நீலவேணி அவர்களை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொல்ல அவரிடம் இருந்த ஹேண்ட் பேக்கில் உள்ளே இருந்த பர்சில் இருந்து ரூ.4,210/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது தொடர்பாக சோதனை சாவடியின் சொந்த பணம் கையிருப்பு பதிவேட்டில் ஒப்பிட்டு பார்த்தபோது அதில் அவர் ரூ.5,200/- என குறிப்பிட்டிருந்தார். இது குறித்து அவரிடம் விசாரிக்க அவர் தான் கொண்டு வந்தது ரூ.5,200/- என்றும், நேற்று இரவு சாப்பாடு மற்றும் செலவுகள் போக மீதி ரூ.4,210/- வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.4,210/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று 12.12.2020-ம்தேதி புளியரை போக்குவரத்து துறை சோதனை சாவடியை திடீர் ஆய்வின்போது கண்டுபிடிக்கபட்ட கணக்கில் காட்டப்படாத பணம் மொத்தம் ரூ.48,270/- கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு செல்லும் வாகன ஓட்டுனர்கள் சோதனை சாவடி அலுவலர்களுக்கு கையூட்டாக பணம் கொடுத்திருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (12.12.2020) காலை 05.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு காலை 07.45 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். A.V.மூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு திருநெல்வேலி, ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 12.12.2020 at 11.30hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.09/2020 u/s 7 of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 CrPC on 12.12.2020 at 12.15 hrs Sd.E.Mcclarine Eskhol, DSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi, Tenkasi and Kanyakumari District at Tirunelveli and original FIR were sent to the Hon'ble Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

12/12/20

Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
16/53A/1, Masilamani Nagar
Tirunelveli - 5